அலகு

# 8

# பேரிடர் மேலாண்மை

## கற்றலின் நோக்கங்கள்

இந்த பாடத்தின் இறுதியில் மாணவர்கள் அறிவது,

- ❖ பேரிடர் வரையறுத்தல்
- ❖ பேரிடரின் வகைகளை பட்டியலிடுதல்
- ❖ பேரிடரின் மேலாண்மை நிலைபாடுகளை விளக்குதல்
- ❖ இயற்கை சீற்றங்களை கணக்கிடுதல்
- ❖ பேரிடர் செவிலியத்தை விவரித்தல்
- ❖ தொற்றுநோய் கண்காணிப்பு மற்றும் நோய் கட்டுப்பாடு பற்றி ஆய்வு செய்தல்
- ❖ பேரிடர் தயார் நிலையில் செவிலியரின் பங்கை விவாதித்தல்
- ❖ பேரிடர் மேலாண்மையின் சட்ட ரீதியான தாக்கங்களை சுருக்கமாகக் கூறுதல்.

J5RP7

### திருக்குறள்:

*வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்*

*உள்ளத்தின் உள்ளக் கெடும்.*

### விளக்கம்:

வெள்ளம் போல் அளவற்றதாய் வரும் துன்பமும், அறிவுடையவன் தன் உள்ளத்தினால் அத்துன்பத்தின் இயல்பை நினைத்த அளவில் கெடும்.



XII_Nursing_Vocational_Unit 8.indd 247 1/12/2022 5:54:49 PM

## 8.1. முன்னுரை


சுற்றுசூழல் மாற்றம் மனித உயிர் இழப்பு, சுகாதார சேவைகள் பாதிப்படைதல் போன்றவை பெரிய அளவில் ஏற்பட்டு வெளியிலிருந்து அதிரடி உதவி தேவைப்படுவதை பேரிடர் எனலாம். இடர்பாடு (இடுக்கண்) எதிர்பார்க்காமல் திடீர் என ஏற்பட்டு இயல்பான வாழ்வையும் சுற்று சூழல் அமைப்பையும் உயிர் காப்பு சேவை முறையையும் நிலை குலைத்துவிடும்.

### 8.1.1 வரையறை

பேரிடர் என்பது பாதிக்கப்பட்ட சமூகமோ அல்லது சமுதாயமோ வலிமையால், பொருளாதாரத்தில் எதிர் கொள்ள முடியாத அளவுக்கு நிலைகுலைவு ஏற்பட்டு அதிக உயிர் இழப்பு, பொருள் இழப்பு, மற்றும் சுற்று சூழல் கேடு ஏற்படுவதும் அதன் விளைவுமே ஆகும்.

| பேரிடர் (Disaster) அகரவரிசை |
|---|
| D – அழிவு (Destruction) |
| I – நிகழ்வு (Incident) |
| S – பாதிக்கப்பட்ட (Suffering) |
| A – நிர்வாக பொருளாதாரத் தோல்வி (Administrative and financial failure) |
| S – மனோபாவம் (Sentiments) |
| T – சோகங்கள் (Tragedies) |
| E – தொற்று நோய்களின் தோற்றம் (Eruption of communicable diseases) |
| R – நிகழ்வுகளை ஆராய்ந்து செயல்முறைப் படுத்துதல் (Research programme and implementation) |


### 8.1.2 பேரிடரின் வகைகள்






XII_Nursing_Vocational_Unit 8.indd 248 1/12/2022 5:54:49 PM

## 8.2 பேரிடர் மேலாண்மை நிலைபாடுகள்




### 8.2.1 இயற்கை சீற்றங்கள் (Natural calamities)

#### வெள்ளம்

அளவுக்கு அதிகமாக வழிந்தோடும் நீரானது அதனுடைய பாதையில் உள்ள நிலங்களை இணைத்து அனைத்தையும் அழித்தலே 'வெள்ளப் பெருக்கு' என்கிறோம். அதிக மழைப்பொழிவு, புயல், பனி உருகுதல், சுனாமி, மற்றும் அணைக்கட்டுகள் உடைதல் ஆகிய காரணங்களால் வெப்பப்பெருக்கு ஏற்படுகின்றது.




உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவில் மிகப் பொதுவான இயற்கை பேரிடர் வெள்ளப் பெருக்கு.

#### முன்னெச்சரிக்கையாக கையாளப்பட வேண்டியவை

நகர கட்டமைப்பு அரசின் பொறுப்பாக இருந்தாலும், நாம்வாழும் இடங்களில் உள்ள ஆபத்தான சூழல் குறித்து அறிந்திருக்க வேண்டும். எ.கா. அணைக்கட்டுக்கு அருகில் வாழும் மக்களுக்கு அணை உடைவதால் ஏற்படும் பாதிப்பு பற்றி சிறப்பு எச்சரிக்கை பற்றி அறிந்திருத்தல். வெள்ளப்பெருக்கு மற்றும் கடல் அலைப்பற்றி முன் அறிவிப்பு மிகவும் கடினம், ஆனாலும் குறிப்பிட்ட விழிப்புணர்வு (அ) முன்னெச்சரிக்கையுடன் இருக்கும்போதே அதே வருடத்தில் சூறாவளி மற்றும் புயல்காற்று பாதிக்கலாம். அவைகள் எப்போதும் வருவதற்கு பல மணி நேரங்களுக்கு முன்னால் அறிவிக்கப்படலாம்.

### 8.2.2 வெள்ளப்பெருக்கின் போது

- ❖ மின்சாதன இணைப்புகள் அனைத்தையும் துண்டித்துவிட வேண்டும்.
- ❖ மக்களையும், உடைமைகளையும் பாதுகாக்க வேண்டும். வெள்ளப்பெருக்கு ஆரம்பிப்பதற்கு முன்பே உடனடியாக பாதிக்கப்படக் கூடியவர்கள், குழந்தைகள்,



XII_Nursing_Vocational_Unit 8.indd 249 1/12/2022 5:54:50 PM

வயதானவர்கள், உடல்நிலை சரியில்லாதவர்கள் மற்றும் உடல் ஊனமுற்றவர்களை மேற்தளத்திற்கு அனுப்புதல்.


- முடிந்த அளவுக்கு சொந்த உடைமைகளை மேல்தளத்திற்கோ அல்லது உயரத்தில் இருக்கும் அறைகளிலோ வைக்க வேண்டும்.
- தண்ணீர் மாசுபடுதலைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதின் மணமோ, நிறமோ மற்றும் சுவையோ மாற்றப்பட்டிருப்பதை அறிய வேண்டும்.
- மக்கள் தொகை அதிகம் உள்ளபகுதிகளை உள்ளூர் நிறுவனங்களின் துணையுடன் அப்புறப்படுத்த வேண்டும்.

### வெள்ளத்திற்கு பின்

உள்ளூர் அதிகாரிகள் கட்டிடங்கள் தண்ணீரால் பாதிக்கப்படவில்லை என்பதை நிர்ணயம் செய்தபிறகு தான் மக்கள் வெள்ளப் பெருக்கிற்கு பிறகு தங்கள் வீடுகளுக்கு செல்ல வேண்டும். இதன் முக்கியத்துவம்,

- குடிக்கும் தண்ணீர் பாதுகாப்பானது என்பதை நிச்சயப்படுத்துதல்.
- வெள்ளத்தில் மூழ்கிய அறைகளை சுத்தம் செய்து தொற்றுநீக்கம் செய்ய வேண்டும்.
- சமையல் அறையில் உள்ள அனைத்து உணவுகள் மற்றும் பாத்திரங்களையும் சுத்தம் செய்து தொற்று நீக்கம் செய்ய வேண்டும்.
- தண்ணீரில் (அ) தண்ணீருக்கு அருகில் உள்ள பொருட்களையோ (அ) குளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்பட்ட உணவுப்பொருட்களையோ தவிர்க்க வேண்டும்.
- வீணாக்கப்பட்ட பொருட்களை பயன்படுத்தாதே. (பானங்கள், மருந்துகள், அழகுசாதனப் பொருட்கள்) மற்றும் பிற.

### 8.2.3 நில நடுக்கம் (Earthquake)



முன்னெச்சரிக்கை அடையாளமின்றி உடன் விளையும் இயற்கை பேரிடரில் நில அதிர்வு ஒருவகை. பூமியின் மேல் தட்டின் நகர்வால் ஏற்படும் நிலநடுக்கம் பூமியின் மேல் பகுதியில் விரிசலையும், தரை அதிர்வது போன்ற நிகழ்வையும் ஏற்படுத்தும்.

> உங்களுக்குத் தெரியுமா?
>
> ***1960-ம் ஆண்டு மே மாதம் 22 ம் தேதி தெற்கு சிலியில் உள்ள வேலிடிவியாவில் ஏற்பட்ட நில அதிர்வே உலகத்தின் பெரிய நிலநடுக்கமாகும். இந்த நிலநடுக்கம் அளவுகோலில் 9.5 நடுக்க அளவாகப் பதிந்துள்ளது.***

### முன்னெச்சரிக்கையாக கையாளப்பட வேண்டியவை.

- நகரகட்டமைப்பு திட்டத்தின்படி பாதிக்கப்படக்கூடிய பகுதிகளை ஆராய்ந்த பின் கட்ட வேண்டும்.
- வீட்டிலுள்ள மின் மற்றும் வாயு இணைப்புக் குழாய்கள் சரியாகப் பொருத்தப்பட்டுள்ளதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.



XII_Nursing_Vocational_Unit 8.indd 250 1/12/2022 5:54:51 PM

❖ உயரமான பகுதிகளில் கனமான பொருட்களையோ, சாதனங்களையோ சேர்த்து வைப்பதை தவிர்க்க வேண்டும்.

❖ குடும்பம் முழுவதையும் வெளியேற்றுவதற்கும், மற்றும் முழுகுடும்பத்தினருக்கும் நிலநடுக்கத்தின் போது என்ன செய்ய வேண்டும் என்பது தெரிந்திருக்கிறதா என்று நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும்.

❖ குடும்ப முதலுதவிப் பெட்டியை தயார் செய்து கொள்ள வேண்டும்.

### நிலநடுக்கத்தின் போது கவனிக்க வேண்டியவை

❖ மக்களை அமைதியாக பதற்றமற்ற நிலையில் பாதுகாக்க வேண்டும்.

❖ வீட்டிற்குள்ளேயே இருப்பவர்கள் கட்டிடத்தின் நடுப்பகுதியில் தங்கி இருக்க வேண்டும்.

❖ படிகட்டுகளை விட்டு தொலைவில் இருக்க வேண்டும். ஏனென்றால் அவைகள் திடீரென்று உடைந்து விழலாம்.

❖ வீட்டிற்கு வெளியே இருப்பவர்கள் கட்டிடங்கள் இடிந்து விழக்கூடிய சுவர்கள் மற்றும் மின் கம்பங்களுக்கு தொலைவில் இருக்க வேண்டும்.

❖ வாகனத்திற்குள்ளேயே இருப்பவர்கள் வாகனத்தை பாலம் மற்றும் கட்டிடங்களுக்கு தொலைவில் நிறுத்த வேண்டும்.

### நிலநடுக்கத்திற்குப் பின்

❖ உனக்கோ அல்லது வேறு யாரேனும் ஒருவருக்கோ காயம் ஏற்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்தல். தீக்காயமோ அல்லது காயமோ காணப்பட்டால் முதலுதவி செய்தல்.

❖ உடனடி சேவைக்காக தெருக்களை சுத்தம் செய்தல்.

❖ குளிர்சாதனப் பெட்டி, தொலைக்காட்சி மற்றும் வானொலியை அணைத்து வைத்தல்.

❖ சமையல் எரிவாயு இணைப்பைத் துண்டித்து வைத்தல்.

❖ இடிபாடுகளுக்கிடையே நடக்க நேர்ந்தால் காலணி அணிதல்.

❖ முக்கியமான செய்திகளை அறிந்துக் கொள்ள பேட்டரியால் இயங்கும் வானொலியை உபயோகித்தல்.

❖ அதிர்ச்சிகளை தாங்குவதற்கு தயாராக இருத்தல்.

உங்களுக்குத் தெரியுமா?

**நிலநடுக்கம் அடிக்கடி பூமிதட்டின் எல்லைகளில் நடக்கும்.**

### 8.2.4 தீ விபத்து (Fire Accident)

வெப்பம், புகை மற்றும் தீச்சுடரை வெளியாக்கக்கூடிய விரும்பத்தகாத நிகழ்வு தீ எனப்படும். இது இயந்திரங்கள், மற்றும் மனித இனத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தக் கூடியது.

**தீ விபத்து ஏற்பட சில காரணங்கள்.**

❖ சமையல் சாதனங்கள்

❖ வெப்பமூட்டுதல்

❖ படுக்கை அறையில் புகைபிடித்தல்

❖ மெழுகுவர்த்தி

❖ குழந்தைகளின் துடுக்குத்தனம்

❖ தப்பான மின் அமைப்புகள்

❖ எளிதில் பற்றும் திரவங்கள்

❖ அறியாமை, தவறாக கையாளுதல், மக்களின் கவனமற்ற ஏனோதானோ செயல்பாடுகள்.



XII_Nursing_Vocational_Unit 8.indd 251 1/12/2022 5:54:51 PM

### தீயினால் ஏற்படும் விளைவுகள்

- ❖ வீடுகள், வனவிலங்குகளின் வாழ்விடம் மற்றும் மரங்கள் அழிதல்.
- ❖ காற்று மாசுபடுதல்.
- ❖ மனிதன் மற்றும் விலங்குகளின் சுவாசமண்டலம் நிரந்தரமாக பாதிக்கப்பட்டு உயிரிழப்பு ஏற்படுதல்.

### முன்னெச்சரிக்கை

- ❖ தீ, முக்கியமாக திறந்த நிலை தீ மற்றும் வெப்பமூட்டிகளை பாதுகாப்பாக வைக்க வேண்டும்.
- ❖ திறந்த நிலை தீக்கு அருகில் மரப்பொருள்கள் அல்லது திரைகள் இல்லாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.
- ❖ படுக்கை அறையில் புகைபிடித்தல் கூடாது.
- ❖ வாணலியில் பொறிக்கும்போது கவனகுறைவாக இருப்பதால் பல விபத்துகள் சமையல் அறையில் ஏற்படுகின்றன.
- ❖ தீப்பெட்டி மற்றும் எளிதில் எரியக் கூடிய பொருட்களை சிறுவர்களுக்கு எட்டாத உயரத்தில் வைக்கவேண்டும்.
- ❖ புகை கண்டுபிடிப்பு கருவிகள் (smoke detectors) மற்றும் புகை எச்சரிக்கை கருவி (Smoke alone) ஒவ்வொரு தளத்திலும் பொருத்த வேண்டும்.
- ❖ அவசர காலங்களில் வெளியேறுவதற்கான வழிதடங்களை அமைக்க வேண்டும்.
- ❖ எரிவாயு கசிவு இருப்பதாக உணர்ந்தால் ஜன்னல்களை திறந்து விட்டு எரிவாயு இணைப்பினை துண்டிக்க வேண்டும்.

### தீ பற்றி எரியும் போது

- ❖ புகை எச்சரிப்பு ஒலி கேட்ட உடனே செயல்பட வேண்டும்.
- ❖ பாதுகாப்பு கதவின் வழியாக வெளியேற வேண்டும்.
- ❖ புகையை சுவாசிக்காதபடிக்கு உன்னை பாதுகாத்துக் கொள்.
- ❖ ஆடையில் தீ பிடித்தால் ஓடக் கூடாது தரையில் படுத்து உருண்டு தீயை அணைக்க முற்பட வேண்டும். (Stop, Drop, Roll)
- ❖ உதவிக்கு குரலெழுப்ப வேண்டும்.
- ❖ தீயணைப்பானை பயன்படுத்தி தீயைக் கட்டுப்படுத்த வேண்டும். நம்முடைய விருப்பான மற்றும் சொந்தமான பொருட்கள் அங்கேயே இருத்தல் கூடாது.
- ❖ கட்டிடங்களில் தீ விபத்து ஏற்படும் போது வெளியேற மின்தூக்கிகளை (Lift) பயன்படுத்தக் கூடாது.

### தீ விபத்து ஏற்பட்ட பின்

1. முதல் மற்றும் இரண்டாம் நிலை காயங்களுக்கு முடிந்த அளவு வேகமாக நீர் ஊற்றி குளிற வைக்கவும்.
2 தீ கொப்புளங்களை உடைக்கக் கூடாது. தீப்பட்ட இடத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் துணிகளை பிரித்தெடுக்கக் கூடாது.
3. அருகில் உள்ள மருத்துவமனையை உடனே அணுகவும்.

### 8.2.5 நச்சுப் புகை மூட்டங்கள் (Clouds of Toxic Flames)





XII_Nursing_Vocational_Unit 8.indd 252 1/12/2022 5:54:52 PM

### முன்னெச்சரிக்கையாக கையாளபட வேண்டியவை

**மோசமான பகுதியில் வசிக்கும் மக்கள்**

❖ காலிசெய்வதற்குரிய திட்டங்களையும், வசதிகளையும் கண்டுபிடித்தல்.

❖ அவசரகால அடையாள அறிவிப்புகளை பழகிக்கொள்ள வேண்டும்.

❖ வீட்டின் கதவு, ஜன்னல்களை இறுக்கமாக விரைவாக பூட்ட வேண்டும்.

❖ குடும்பத்தின் அவசரத்திற்கு தேவையானவற்றை தயாராக வைத்துக்கொள்ள வேண்டும்.

### அவசரகாலங்களில்

❖ தொலைபேசியை பயன்படுத்தாதே. தொலைபேசி இணைப்புகளை மீட்பு தேவைக்காக விட்டுவிட வேண்டும்.

❖ வானொலி மற்றும் பிற ஊடகங்களிலிருந்து வரும் அறிவிப்புகளைக் கேட்க வேண்டும்.

❖ வானொலி மற்றும் ஒலிபெருக்கிகளில் சொல்லும் அறிவுரைகளை பின்பற்று.

❖ கதவு மற்றும் சன்னல்களை மூடு.

❖ காற்று அறைக்குள் நுழைவதை தடுத்துநிறுத்து.

❖ கதவு மற்றும் சன்னல்களில் காணப்படும் பிளவுகளை ஒட்டும் பிளாஸ்திரி கொண்டு மூட வேண்டும்.

❖ தண்ணீர் தேக்கி வைத்து கொள்ள வேண்டும்.

❖ காற்றோட்ட மற்றும் காற்று கடத்திகளை நிறுத்த வேண்டும்.

### அவசர நிலைக்குப்பின்

❖ பாதிப்பு நீடிக்கும் வரை அதிகாரிகளின் அறிவுரையின்படி வெளியில் எங்கும் சொல்லக்கூடாது.

❖ மாசுபடுத்தாத முறைகளை பின்பற்றுவது முக்கியம்.

---

**உங்களுக்குத் தெரியுமா?**

***மத்திய பிரதேச போபல் நகரில் இருந்த யூனியன் கார்பைடு நிறுவனத்தின் பூச்சி கொல்லி தொழிலகத்தில் 1984 டிசம்பர் 2 இரவில் ஏற்பட்ட நச்சுப்புகை கசிவு போபால் பேரிடர் அல்லது போபால் புகை மூட்ட சோகம் எனப்பட்டது. இதுவே உலகின் மிகப்பெரிய மோசமான தொழிற்சாலை பேரழிவு.***

***இறப்பு = 3787***

***அபாயகரமாக காயங்கள் = 558125***

---

## 8.3 பேரிடர் செவிலியம் (*DISASTER NURSING*)

பேரிடரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு செவிலியத்தின் அறிவு, திறமை மற்றும் நடத்தையின் மூலம் செவிலிய மற்றும் மருத்துவ தேவைளை கண்டுபிடித்து உதவுவதாகும்.

### 8.3.1 பேரிடர் செவிலியத்தை திட்டமிடுவதில் அடிப்படைக் கொள்கைகள்

*N* - (Nursing plan) செவிலித்திட்டம் முழுமையானதாகவும், ஒருநிலைப்படுத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

*U* - (Update) உடலும் மனமும் தயாரான நிலையில் இருத்தல்.

*R* - (Responsible) நிர்வகித்தல், போதித்தல் மற்றும் மேற்பார்வையிடுதலில் பொறுப்பு

*S* - (Stimulate) சமுதாயத்துடன் சேர்ந்து பணியாற்றுவதை ஊக்குவித்தல்



XII_Nursing_Vocational_Unit 8.indd 253 1/12/2022 5:54:52 PM

E – (Exercise) பொருத்தமான உடற்பயிற்சி.

### 8.3.2 எளிய முக்கோண விரைவான சிகிச்சை (START – Simple Triage Rapid treatment

- ❖ உதவிக்கு அப்பாற்பட்டவர்கள்
- ❖ காயம்பட்டவர்ககள்
- ❖ காயம்பட்டவர்களுக்கு போக்குவரத்து வசதி
- ❖ காயம்பட்டவர்கள், குறைந்த அவசர சிகிச்சை தேவைப்படுபவர்கள்.

### 8.3.3 தொற்று நோய்களை கண்டறிந்து நோய்களை கட்டுப்படுத்துதல்

- ❖ உடனடியாக அனைத்து சுகாதார சேவைகளையும் செயல்படுத்த வேண்டும்.
- ❖ நோய்களை உடனே அழித்து தடுக்கும் நிறுவனங்களை செயல்படுத்த வேண்டும்.
- ❖ தடைகளைக் கண்டறிந்து, முறையான கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளைக் கையாள வேண்டும்.
- ❖ விரைவாக பரவும் நோய்களைப் பற்றிய விவரங்களை ஆராய்தல்.

**நோய்த்தடுப்பு மருந்து** – சுகாதார நிறுவனங்கள் பொது மக்கள் அரசியலுடன் இணைந்து அனைவருக்கும் நோய்த்தடுப்பு என்ற முறையில் டைபாய்ட், காலரா மற்றும் டெட்டனஸ் போன்ற நோய்களுக்கு தடுப்பூசி மருந்துகளை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்..

### உணவு (Nutrition)

- ❖ பேரிடருக்குப்பின் உணவு வழங்குதல் குறித்து மதிப்பிட வேண்டும்.
- ❖ பாதிக்கப்பட்ட மக்களின் உணவுத் தேவையை மதிப்பிட வேண்டும்.
- ❖ தினசரி உணவுத்தேவை, மக்கள் தொகை கூட்டத்துக்கு தேவையான உணவு முதலியவற்றைக் கணக்கிட வேண்டும்.
- ❖ பாதிக்கப்பட்ட மக்களின் உணவு நிலையை கவனித்து பராமரிக்க வேண்டும்.

### பாதுகாப்பு நடவடிக்கைகள் (Production Measures)

- ❖ தண்ணீர் வழங்கிடுதல் அவசரக் காலங்களில் தண்ணீரின் தன்மை மற்றும் தேவைகள் உணரப்பட வேண்டும். தண்ணீரை சுத்திகரிப்பதற்கு குளோரின் இடுதல் ஒரு சிறந்த முறையாகும்.
- ❖ மக்களையும், விலங்குகளையும் கட்டுப்படுத்துவதற்கு வேலிகள் அமைத்து காவலுக்கு ஒரு நபரை ஏற்பாடு செய்யலாம்.
- ❖ கழிவுகள் சரியான முறையில் அகற்றப்பட நீராதாரங்களிலிருந்து தொலைவில் இருக்க வேண்டும்.
- ❖ ஆறுகளிலும், நீர்வீழ்ச்சிகளிலும் குளிப்பதும், துவைப்பதும் மற்றும் விலங்குகளை பராமரிப்பது போன்றவற்றைத் தடுக்க வேண்டும்.
- ❖ கிணறும், கிணற்று நீரும் பாதுகாக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- ❖ கிணற்றின் அளவீடு மற்றும் தண்ணீர் வழங்கிடுதல் பற்றிக் கணக்கிட வேண்டும்.
- ❖ நீர் ஏற்றுவதற்கு முன்னால் எல்லா குடிநீர் தொட்டிகளும் சுத்தம் செய்யப்பட்டு தொற்றுநீக்கம் செய்ய வேண்டும்.



XII_Nursing_Vocational_Unit 8.indd 254 1/12/2022 5:54:52 PM

| முதன்மை | வண்ணக்குறியீடு | நிலைமை |
|---|---|---|
| முதலாவது (உடனே) | சிவப்பு | உயிர்க்கு ஆபத்து –உயிர் பிழைப்பதற்கான வாய்ப்பு மிகுதி |
| இரண்டாவது (இடைநிலை) | மஞ்சள் | ஆபத்தான காயம் 2 மணி நேரப் பயணம் வரை சிகிச்சை தாமதிக்கலாம் |
| மூன்றாவது (காத்திருத்தல்) | பச்சை | நடமாடக் கூடிய நிலையில் காயம் – 3 மணி நேரம் வரை போக்குவரத்துக்கு காத்திருக்கலாம். |
| குறைந்த முன்னுரிமை | கருப்பு | இறக்கும் நிலையிலிருப்போர் இறந்தவர்கள், முழுமையாக 100% காயமடைந்தோர். |

### அடிப்படைச்சுத்தம் மற்றும் தன்சுகாதாரம் (Basic Sanitation & personal Hygeine)

பல ஒட்டிப்பரவும் நோய்கள் குடிக்கும் தண்ணீரினாலும், உணவு மலத்தினால் மாசுபடுவதினாலும் பரவுகிறது. எனவே சுகாதாரமுறையில் கழிவுகளை அகற்ற ஏற்பாடு செய்ய வேண்டும். கழிப்பிடங்கள் பழுதடைந்த இடங்களில் கிடைப்பதைக் கொண்டு கழிப்பிட வசதி செய்யப்பட வேண்டும். குளிப்பதற்கு துவைப்பதற்கு, சுத்தம் செய்வதற்கான வசதிகள் செய்து கொடுக்கப் பட வேண்டும்.

### பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல்

மறுசீரமைப்பு நிலையில், பூச்சிகள் மூலம் பரவும் தொற்று நோய்களை அவசரநிலையில் கட்டுப்படுத்த வேண்டும். முக்கியமாக டெங்கு காய்ச்சல், மலேரியா, லெப்டோபைரோசிஸ், எலிக்காய்ச்சல், பேன்காய்ச்சல் மற்றும் பிளேக் போன்ற நோய்கள் பரவும் இடங்களில் அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும். வெள்ளநீரில் கொசுக்களின் இனப்பெருக்கம் நடைபெற வாய்ப்புள்ளது.

### 8.3.4 பேரிடரில் தயார்நிலையின் பங்கு

- ❖ தேவையானவைகளை வரிசைப்படுத்துதல்.
- ❖ பேரிடர்தயார்நிலையை தகுதிப்படுத்துதல்.
- ❖ தேவைப்படும் இடங்களில் பேரிடர் நிகழ்வுகளைப் பற்றி போதித்தல்.
- ❖ பேரிடருக்கு உதவ பயிற்சியளித்தல்.
- ❖ மேம்படுத்தப்பட்ட உதவிகளை அளித்தல்
- ❖ பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதித்தல்.
- ❖ செவிலியர் பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.
- ❖ சுற்றுப்புற இடர்களை மதிப்பிட வேண்டும்.
- ❖ சமுதாய ஆதாரங்களை தெரிந்து கொள்ள வேண்டும்.
- ❖ உடலளவில் தயாராக இருத்தல்.



XII_Nursing_Vocational_Unit 8.indd 255 1/12/2022 5:54:52 PM

❖ வேலை செய்ய தயார்நிலை.

❖ சமுதாயம் தயார்நிலையில் இருத்தல்

## 8.4 அவசரநிலையை எதிர்கொள்ளுதல்

அவசரநிலை என்பது ஒரு அசாதாரண நிலை அல்லது நிகழ்வில் சமுதாயத்திற்கு தேவைப்படும் அதிசீக்கிர செயல்பாடு ஆகும். பேரிடர் நேரத்தில் சரியாக வேலை செய்வதற்கு பயிற்சி அல்லது கல்வி அறிவு பெற்ற குழு தலைமைத்துவத்தையும் தகவல் தொடர்பையும் அறிந்திருக்க வேண்டும்.

❖ தொடர்புடைய அவசரங்கள் மற்றும் அச்சுறுத்துதல் ஏற்படக் கூடிய நிகழ்வுகளில் தயார்நிலை மற்றும் சரியான திட்டங்களை இயற்றுதல். (இயற்கை, இயந்திரம், உயிரினம் மற்றும் மனிதன்)

❖ பார்வையாளர்கள், அமைப்புகள் மற்றும் பணியாட்களின் தேவைகளை குறிப்பிடுதல்.

❖ பேரிடர் அழிவின் போது எவ்வாறு பாதுகாத்தல், வெளியேற்றுதல் மற்றும் மீட்பு பற்றி விளக்குதல்.

❖ அவசரநிலையின் போது தனிப்பட்ட நபரின் பொறுப்புகளை செயல்படுத்த நிர்ணயித்தல்.

❖ வெள்ளத் திட்டங்களை இணைத்தல்.

## 8.5 பழைய நிலைக்கு திரும்புதல் அல்லது புனர்வாழ்வு

பாதிக்கப்பட்ட நிலையில் பாதிக்கப்பட்டவரின் வாழ்வாதாரம், உடைமை, உற்பத்தி நிலை, ஆகியவை திரும்பவும் அடைய விரும்புவதே மறுகட்டமைப்பு அல்லது புனர்வாழ்வு என்பதாகும். இந்த நடவடிக்கைகள் உள் கட்டுமானங்கள், நிறுவனங்கள், சேவைகள் ஆகியவற்றை கட்டமைத்து பேரிடரால் அழிக்கப்பட்ட அல்லது செயலிழக்கப்பட்ட உற்பத்தியை திருப்புகிறது.

**பேரிழப்பிற்குபின் நடவடிக்கைகள் மூன்று (தற்போது நான்கு) நிலைகளில் உள்ளது**

**உதவி / வருத்தம் அகற்றல்:** பேரிடர் ஏற்பட்டபின் முதல் 24 நான்கு மணிநேரம் முதல் இரண்டு மூன்று மாதங்கள் வரை இருப்பிடம், உணவு நீர் மற்றும் மருத்துவ உதவிகள் அளிக்கப்பட வேண்டும்.

**மறுக்கட்டமைப்பு:** புனர்வாழ்வுக்குப் பின் இரண்டு வருடங்களில் தேவையான அடிப்படை கட்டமைப்பு, இருப்பிட வசதிகள் அளித்து வாழ்க்கையை புதிதாக தொடங்க செய்ய வேண்டும்.

**மறுவாழ்வு:** இழந்த வாழ்வாதாரங்களை மீட்டமைத்து புதிய பொருளாதார வாய்ப்புகளை அளித்து நில நீர் மேலாண்மைகளை புதிப்பித்தல் மூலம் மக்களின் பலவீனத்தைக் குறைத்து எதிர்கால பேரிடர்களைக் கையாள தயார்படுத்துதல்.

**தயார் நிலை:** ஆக்கபூர்வ வழிமுறை, செயலமைப்பு மூலம் பாதிப்பு உள்ள இடங்களில் எதிர்கால பெரும் துன்பங்களில் தாக்கத்தை குறைக்கும் அல்லது அகற்றும் முறையே வடுவற்ற தொய்வில்லா தொடர் முயற்சியே மறுகட்டமைப்பும் மறுவாழ்வும் அமைய வழிவகுக்கும்.

## 8.6 சட்ட நெறிமுறைகள்

பேரிடருக்குப்பின் சட்ட நெறிமுறைகளின் கொள்கையானது பேரிடர் சுழற்சியின் எல்லா நிலைகளிலும் தகுதியான பதிலளிப்பை வழங்குவதாகும். ஆனால் இயற்கையின் கடின அமைப்பானது அதனை எதிர் கொள்வதை சவாலானதாக்குகிறது.

### 8.6.1 சட்டங்கள் மற்றும் ஆணைகள்

பேரிடர் மேலாண்மை விதி (சட்டம்) 2005 நவம்பர் 28 ல் மாநில அவையிலும் டிசம்பர்



XII_Nursing_Vocational_Unit 8.indd 256 1/12/2022 5:54:52 PM

12 ல் மக்களவையிலும் நிறைவேற்றப்பட்டது. 2006 ஜனவரி 9 ல் குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெறப்பட்டது. பேரிடர் மேலாண்மை விதி 11 பகுதி(பிரிவு)களில்79அதிகாரங்கள்கொண்டது. இவ்விதி இந்தியா முழுமைக்கும் ஆனது. இது பேரிழப்புகளுக்கு பயன்தரும் மேலாண்மை, அதைச் சார்ந்தவற்றை கொண்டது.

- ❖ பேரிழப்பை எதிர்கொண்டு போராட கீழ்கண்ட அமைப்புகளை நிறுவ விதி செய்கிறது.
- ❖ தேசிய பேரிடர் மேலாண்மை அதிகார மையம்
- ❖ மாநில பேரிடர் மேலாண்மை அதிகார மையம்
- ❖ மாவட்ட பேரிடர் மேலாண்மை அதிகார மையம்

### 8.6.2 பேரிடர் மேலாண்மையின் தேசிய கொள்கை (NPDM) 2009

22 அக்டோபர் 2009 லிருந்து நடைமுறைக்கு வந்தது. பாதுகாப்பானதும், இழப்பிற்கு ஈடு கொடுக்கும் இந்தியாவை உருவாக்குவது இதன் செயல் திட்டம்

- ❖ தயாராக இருப்பது
- ❖ தடுப்பு நடவடிக்கை
- ❖ இழப்பை குறைப்பது மற்றும் ஈடுகொடுப்பது
- ❖ நாட்டின் நடைமுறையில் உள்ள பேரிழப்பு மேலாண்மை 2009 ல் நடுவண் மீட்பு உதவிகள் இருவகைப்படும்.

**நடுவண் அரசின் முதல்கால உதவி கடமைகளாவன**

- ❖ முன் அறிவிப்பும் எச்சரிக்கையும் முறை அமைப்பது
- ❖ தடங்கல் இல்லா தொடர்புகளை ஏற்படுத்துவது
- ❖ தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள்கள் மூலம் பேரிடர் ஏற்பட இருப்பதையும் இழப்புகளை எதிர்கொள்ள உள்ள தயார் நிலையையும் அறிவித்து செய்தி பரப்புவது
- ❖ தேவைப்படும் அத்தியாவசியப் பொருட்கள், எரிபொருள்கள் போன்றவற்றையும் தேவைபடின் இடங்களை காலி செய்யவும், தக்க பயண வசதிகள் ஏற்படுத்துவதும்.

**நடுவண் அரசின் இரண்டாம் நிலை உதவி வேலைப்பாடுகள்**

- ❖ நடுவண் நீராண்மை துறைமூலம் நீர்வரத்து வெள்ளம் பற்றிய முன் அறிவிப்பு.
- ❖ உதவி, புனரமைப்பு மீட்பு வேலைகளில் உள்ளாட்சியருக்கு ராணுவ உதவி
- ❖ பயிர், கால்நடை பாதுகாப்பு, உணவு மருத்துவ வசதி போன்றவற்றுக்கு தற்காலிகத் திட்டங்கள்
- ❖ குடிநீர் விநியோகத்திற்கு தேவையான தொழில் நுட்பங்கள்

### 8.6.3 பேரிடர் அவசரப் பெட்டி

இயற்கை பேரிடர் நிகழும் பொழுது, காவல் துறை உதவி அல்லது அரசாங்கம் உதவியை நாம் சார்ந்திருக்கக் கூடாது. நாம் பெற்றுக் கொள்ள முடியாத அளவுக்கு மளிகைக் கடைகள் சேதமடைந்திருக்கலாம். கடையில் உள்ள பொருட்கள் வேகமாகக் குறையலாம் அல்லது நாம் கடைக்கு செல்ல முடியாமல் இருக்கலாம்.

பேரிடர் பெட்டியில் நமக்குத் தேவையான ஆறு அடிப்படைப் பொருட்கள்

- ❖ தண்ணீர், உணவு, முதலுதவிப் பொருட்கள்



XII_Nursing_Vocational_Unit 8.indd 257 1/12/2022 5:54:52 PM

- துணிகள், மெத்தைகள் மற்றும் துப்புரவுப் பொருட்கள் கருவிகள் மற்றும் சிறப்புப் பொருட்கள்

### தண்ணீர்

நாம் குறைந்தது மூன்று நாட்களுக்கு தேவையான அளவு தண்ணீரை சேமிப்பில் வைத்திருக்க வேண்டும். ஒரு நபருக்கு நாளொன்றுக்கு ஒரு கேலன் வீதம் நாம் வைத்திருக்கும் நீரில் குளோரின் இல்லை எனில் ஒரு கலனில் சிறிதளவு வீட்டு பிளிச்சிங் பவுடரை சேர்த்து இதை இருண்ட, குளிரான பகுதியில் ஆறு மாதத்திற்கு சேமிக்கலாம்.

### உணவு

அழிந்து போகாத மற்றும் குளிர்பதனம் தேவை இல்லாத மூன்று நாட்களுக்கு தேவையான உணவை பேரிடர் பெட்டியில் வைக்கலாம் எப்பொழுதும் சூடு செய்ய அவசியமில்லாத உணவை தேர்ந்தெடுக்க வேண்டும். தாகத்தை அதிகரிக்கம் உப்பு அதிக அளவில் உள்ள உணவைத் தவிர்க்க வேண்டும்.

மிட்டாய், சாக்லெட், டீ, காபி, சர்க்கரை, உப்பு, மிளகு சாறு, புட்டிப் பால், சூப், பதப்படுத்தப்பட்ட பழம், கறி, காய்கறிகள், வேர்கடலைக் வெண்ணெய், ஜெல்லி, தேவைப்பட்டால் குழந்தை உணவு செல்ல பிராணிகள் வைத்திருப்போர் அதற்கான உணவு போன்றவை பரிந்துரைக்கப்பட்ட உணவுகள் ஆகும்.

**மாணவர் செயல்பாடு**

பேரிடர் மேலாண்மை பெட்டியை தயார் செய்.

**மாணவர் செயல்பாடு**

கீழ்க்கண்டவற்றை பொருத்துக.

| A | B |
|---|---|
| ஒரு நிகழ்வில் அல்லது ஒரு சூழலில் தீவிரமாக விரைந்து செயல்பட வேண்டிய நிலை | மக்கள் செயல்பாட்டால் பேரிடர் |
| பாதிப்பு உள்ள இடங்களில் அதிகமான தயார் நிலையில் ஆக்கபூர்வ வழி முறை | முன் அறிந்து உரைப்பதும் எச்சரிக்கைவிடும் முறை அமைப்பது |
| கட்டிட இடர்பாடு மற்றும் தீவிரவாத தாக்குதல் | அவசரநிலை |
| முதல்நிலை உதவி வேலைப்பாடுகள் | இயற்கைப் பேரிடர் |
| நில அதிர்வு மற்றும் கடல் சீற்றம் | தயார்நிலை |



XII_Nursing_Vocational_Unit 8.indd 258 1/12/2022 5:54:52 PM

*பாடச்சுருக்கம்*

*பேரிடர் என்பது பாதிக்கப்பட்ட சமூகமோ அல்லது சமுதாயமோ வலிமையால், பொருளால் எதிர் கொள்ள முடியாத அளவுக்கு நிலைகுலைவு ஏற்பட்டு அதிக உயிர் இழப்பு, பொருள் இழப்பு, மற்றும் சுற்று சூழல் கேடு ஏற்படுவதும் அதன் விளைவுமே ஆகும்.*

*பலவகையான இயற்கைப் பேரிடர்கள் உள்ளன அவையாவன வெள்ளம்,புவி அதிர்ச்சி, தீவிபத்து மற்றும் புகை விஷவாயுக்கள்.*

*பேரிடர் மேலாண்மை என்பது அவசர காலங்களில் பேரிடரின் தாக்கத்தைக் குறைப்பதற்காக எடுக்கப்படும் அவசரகால நடவடிக்கைகளும் பொறுப்புகளுடன் கூடிய தயார்நிலை மற்றும் புனர்வாழ்வும் ஆகும்.*

*பேரிடர் செவிலியம் என்பது பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவைப்படும் மருத்துவ உதவிகளை அளிப்பதற்கு தேவையான அறிவு மற்றும் திறமையாக பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நோய்தடுப்பு,உணவூட்டம்,சுற்றுப்புறசுகாதாரம் மற்றும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றை அளிப்பதன் மூலம் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தலாம். புனர்வாழ்வு முறைகளாவன மீட்டெடுத்தல், திரும்பக் கட்டுப்படுத்துதல் மற்றும் பேரிடரை எதிர்கொள்ள தயார்படுத்துதல் ஆகும் பேரிடர் மேலாண்மை என்பது பேரிடரைத் தடுத்தல், ஆபத்துக் காரணிகளைத் தடுத்தல் மூலம் சமூதாயத்தில் பேரிடர் தாக்கத்தைக் குறைத்தலாகும்.*

## A-Z சொற்பொருட்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| நிலநடுக்கம் (Earthquake) | – | பூமியின் மேல் தட்டின் நகர்வால் பூமியின் மேற்பகுதியில் விரிசலையும் தரை குலுங்குவது போன்ற நிகழ்வையும் ஏற்படுத்துவது நிலநடுக்கம் எனப்படும். |
| பேரிடர் செவிலியம் (Disaster Nursing) | – | பேரிடர் செவிலியம் என்பது பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவைப்படும் மருத்துவ உதவிகளை அளிப்பதற்கு தேவையான அறிவு மற்றும் திறமை ஆகும். |
| நிவாரணம் (Relief) | – | பேரிடர் ஏற்பட்டவுடன் முதல் 24 மணிநேரம் முதல் 2 அ 3 மாதங்கள் வரை இருப்பிடம், உணவு, நீர் மற்றும் மருத்துவ உதவிகள் அளித்தல் |
| மறுசீரமைப்பு (Reconstruction) | – | பேரிடர் அகன்ற பின் இரண்டு வருடங்களில் தேவையான அடிப்படை கட்டமைப்பு, இருப்பிட வசதிகள் மூலம் வாழ்க்கையை புதிதாக்குதல். |
| மறுவாழ்வு (Rehabilitation) | – | இழந்த வாழ்வாதாரங்களை மீட்டு அமைக்க புதிய பொருளாதார வாய்ப்புகள், நீர் நில மேலாண்மைகளை புதுபித்து மக்களின் பலவீனத்தை குறைத்து எதிர்கால பேரிடரை கையாள திறனூட்டுதல். |
| தயார்நிலை (Readiness) | - | ஆக்கபூர்வ வழிமுறை செயலமைப்பு மூலம் பாதிப்பு உள்ள இடங்களில் எதிர்கால பேரிடரின் தாக்கத்தை குறைக்கும் அல்லது அகற்றும் முறையே வடுவற்ற தொய்வில்லா முயற்சியே மறுகட்டமைப்பும், மறுவாழ்வும் அமைய வழிவகுக்கும். |



XII_Nursing_Vocational_Unit 8.indd 259 1/12/2022 5:54:52 PM

## மதிப்பீடு

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது.

1. கீழ்கண்டவற்றில் எது இயற்கை பேரிடர் அல்ல.

   அ)ஆழிபேரலை ஆ)காடு அழிப்பு
   இ)பெரும் புயல் ஈ)இடி மின்னல்

2. பூமியின் மேல்தட்டின் நகர்வால் ஏற்படும் ஒரு வகை குலுங்குவது போன்ற நிகழ்வு

   அ)எரிமலை ஆ)நில அதிர்வு
   இ)வெள்ளம் ஈ)பெரும்புயல்

3. கீழ்கண்டவற்றில் எது மக்கள் செயல்பாட்டு பேரிடர்

   அ)எரிமலை ஆ)மண் சரிவு
   இ)வெள்ளம
   ஈ)தீவிரவாத தாக்குதல்

4. பேரிடர் மேலாண்மையின் முதல் நிலைப்பாடு

   அ)நெடுங்கால வடிவமைப்பு
   ஆ)தயார்நிலை
   இ)இடரின் விளைவு
   ஈ)எச்சரிக்கை நிலை

5. எதிர்காலத்தில் கீழ்கண்டவற்றில் எது வெள்ளத்தின் ஆபத்தை அதிகரிக்கும்?
   அ)மக்கள் தொகை பெருக்கம்
   ஆ)நகரமயமாதல்
   இ)காலநிலை மாற்றம்
   ஈ)அனைத்தும்

### II கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி

1. பேரிடர் என்றால் என்ன?
2. இயற்கைப் பேரிடர் என்றால் என்ன?
3. மக்கள் செயல்பாட்டு பேரிடர் என்றால் என்ன?
4. பேரிடர்மேலாண்மையின் நிலைப்பாடுகள் என்ன?
5. வெள்ளம் என்றால் என்ன?
6. பேரிடர் மேலாண்மை வரையறு.
7. நில அதிர்வு என்றால் என்ன?
8. தீவிபத்தில்செய்ய வேண்டிய மேலாண்மை என்ன?
9. "ஸ்டார்ட்" என்பதன் விரிவாக்கம் என்ன?
10. பேரிடர் மேலாண்மையில் மறுவாழ்வின் நிலைகள் யாவை?

### III கீழ்க்கண்ட வினாக்களுக்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. பேரிடர் மேலாண்மை பெட்டி பற்றி சுருக்கமாக எழுதுக.
2. சட்டத்தின் பார்வையில் பேரிடர் மேலாண்மை.

## மேற்கோள் நூல்கள்


1. ParkJ.E, 2005, “Preventive and social medicine” 18 edition Jabalpur, Bhanot publishers.
2. Alexander David 2002; Principles of emergency planning and management, Terra publishing.
3. Haddow, George et al; Introduction to emergency management, butterworth publications.


## இணைய இணைப்பு

- https://en.wikibooks.org/
- https://en.wikipedia.org
- https://ndma.gov.in
- https://www.cambridge.org/